தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 23.01.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவம் மையம் மற்றும் StartupTN இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் 1.06 லட்சம் சதுர அடி பரப்பளவில் நிறுவப்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலம் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கு இடையே புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் மற்றும் அறிவுசார் தொழில்நுட்பங்களை பரிமாற்றம் செய்வதற்கு வழிவகுக்கும். பொது தனியார் கூட்டு முயற்சியின் மூலம் உயிர்த்தொழிநுட்பவியல், உயிர் தகவலியல், மரபியல், மூலக்கூறு கண்டறிதல், மரபணு தனிமைப்படுத்துதல், உயிரணு வளர்ப்பு மற்றும் வேளாண் இடுபொருட்கள் ஆகியவற்றை மேம்படுத்த உதவும்.

இதன் தொடக்கமாக, உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் வேளாண் தொடக்க நிறுவனங்களுக்கு இடையே ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று (22.01.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

உயிர்த்தொழில்நுட்ப மகத்துவ மையம் சார்பாக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மைய இயக்குனர் முனைவர் ந.செந்தில் மற்றும் StartupTN நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு சிவராஜ ராமநாதன், திரு.தினேஷ்குமார் ஆகியோர்கள் கூடுதல் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். அதுல் ஆனந்த் இ.அ.ப, முன்னிலையில் வேளாண்மை தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்த StartupTN உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி, தமிழ்நாட்டில் வேளாண்மை மற்றும் உயிரித்தொழில்நுட்ப startup வளர்ச்சியடையச் செய்ய, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME) மற்றும் StartupTN உடன் இணைந்து செயல்படுவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***